செய்தி வெளியீடு எண்: 650 நாள்:27.09.2019

# செய்தி வெளியீடு

மாநிலங்களுக்கு இடையிலான நல்லுறவை பேணி ஒருங்கிணைந்த வளர்ச்சியை ஊக்குவிக்கும் பொருட்டு தென் மாநிலங்களுக்கான மண்டல குழு கூட்டம் தமிழ்நாட்டின் தலைமைச் செயலாளர் திரு.க.சண்முகம், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (27.09.2019) சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், உள்துறை அமைச்சகத்தின் பன்மாநிலக் குழுவின் சிறப்பு செயலர் திரு. சஞ்சீவ் குப்தா, இ.ஆ.ப., ஆந்திர மாநில தலைமைச் செயலர் திரு.எல்.வி.சுப்ரமணியம், இ.ஆ.ப., கர்நாடக மாநில தலைமைச் செயலர் திரு.டி.எம்.விஜயபாஸ்கர், இ.ஆ.ப., கேரள மாநில கூடுதல் தலைமைச் செயலர்(உள்துறை) திரு.விஷ்வாஸ் மேத்தா, இ.ஆ.ப. மற்றும் தெலுங்கானா, புதுச்சேரி, லட்சத் தீவுகள் மற்றும் அந்தமான் நிக்கோபர் ஆகிய மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் செயலர்கள் மற்றும் உயரதிகாரிகள், தமிழ்நாடு அரசின் செயலாளர்கள் மற்றும் மத்திய அரசின் பல்வேறு அமைச்சகங்களைச் சேர்ந்த உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிதி, சுகாதாரம், தொலைத் தொடர்பு, பெண்கள் பாதுகாப்பு, ஊராட்சிகள், மீன்வளம், எரிசக்தி, வேளாண்மை உள்ளிட்ட பல துறைகளில் தென் மாநிலங்களுக்கிடையேயான பல்வேறு கருத்துருக்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**